**தலைப்பு 9 – நிர்வாக மேன்முறையீட்டு நியாயசபை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 9 நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள் பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஜுன் 03 ஆந் திகதியன்று பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல்களது மாதிரியின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய மூலவளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமானளவு விரிவான கணக்காய்வை மேற்கொள்ளக்கூடியவாறு தயாரிக்கப்பட்டவையாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் கணக்கிணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்கள் அல்லாத கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தலும் அவற்றை நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குமான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தயாரித்தல், திட்டமிடல், அமுல்படுத்தல், பேணுதல் என்பனவும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

நியாய சபைக்கென ஏற்பாடு செய்த மொத்த நிதி ரூபா 24,330,000 ஆகும். மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 23,475,078 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, நியாய சபைக்கு ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த நிதியில் 4 சதவீதத்திற்குச் சமமான ரூபா 854,922 சேமிப்புக்குள்ளாகியிருந்தது. விபரம் வருமாறு

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | நிகர நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | நிகர நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டு வருவன | 23,130,000 | 22,917,292 | 212,708 | 1 |
| மூலதனம் | 1,200,000 | 557,786 | 642,214 | 54 |
| மொத்தம் | 24,330,000 | 23,475,078 | 854,922 | 4 |

**2.2 முற்பணக் கணக்குகள்**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

நியாய சபைக்குரிய விடய இலக்கம் 00901 உடைய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளவாறான பெறுமதிகளும் பின்வருமாறு

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதி கூடிய எல்லை | உள்ளவாறானது | அதி குறைந்த எல்லை | உள்ளவாறானது | அதி கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| 1,170,000 | 645,954 | 355,000 | 732,764 | 2,800,000 | 1,370,675 |

**2.3 கணக்காய்வு அவதானிப்பு**

நிர்வாக மேன்முறையீட்டு நியாயசபையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் மேற்படி 1.1 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்படும் கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளில் பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3 பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகளையும் புத்தகங்களையும் பேணாமை

நியாயசபை கீழே குறிப்பிடப்படும் பதிவேடுகளைப் பேணியிராமை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்டன.

| பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் |
|---|---|
| கணணிகள், துணைப்பாகங்கள் மற்றும் மென் பொருள் தொடர்பான நிலையான சொத்துப்பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| மின்சார உபகரணப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(2) |

### 3.2 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

**வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 28 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கைப் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.

### 3.3 செயல் முன்னேற்றம்

**போதுமான அளவு நிறைவேறாத பிரதான பணிகள்**

2002 இன் 4 ஆம் இலக்க நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபை அதிகாரச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் நியாய சபைக்குச் சமர்ப்பிக்கப்படும் ஏதாவதுதொரு மேன்முறையீடானது அம் மேன்முறையீடு கிடைக்கப் பெற்ற தினத்திலிருந்து 2 மாதங்களுக்குள் விசாரிக்கப்பட்டு இறுதியானதும் பொருத்தமானதுமான தீர்வு எய்தப்பட வேண்டும். எனினும், முன்னைய ஆண்டுகளில் கிடைக்கப்பெற்ற மேன்முறையீடுகள் பரீசீலிக்கப்பட்டு பொருத்தமானவாறு முடிவு எடுக்கப்படாத 588 மேன்முறையீடுகளும் மீளாய்வாண்டின்போது பெறப்பட்ட 244 மேன்முறையீடுகளுமாக மொத்தம் 832 மேன்முறையீடுகள் மீளாய்வாண்டில் முடிவு செய்யப்பட வேண்டிய நிலையில் இருந்தன. மீளாய்வாண்டின்போது அதில் 166 மேன்முறையீடுகள் பரிசீலிக்கப்பட்டு பொருத்தமான முடிவெடுக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நியாயசபைக்கு 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் கிடைக்கப் பெற்ற 588 மேன்முறையீடுகளில் 2 மாதங்கள் முடிவடைந்த 428 மேன்முறையீடுகள் சம்பந்தமாக 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டு பொருத்தமானவாறு முடிவெடுக்கப்படுவதற்கு நியாய சபை தவறியிருந்தது. அந்த மேன்முறையீடுகளுக்கிடையே 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 05 மேன்முறையீடுகளும் இருந்தன.

(ii) 2015 ஆம் ஆண்டில் 244 மேன்முறையீடுகள் பெறப்பட்டன. அதில் 06 மாத்திரம் பரிசீலிக்கப்பட்டுப் பொருத்தமானவாறு முடிவெடுக்கப்பட்டிருந்தன. அதற்கமைய, மீளாய்வாண்டின்போது பெறப்பட்ட 238 மேன்முறையீடுகளது நடவடிக்கைகள் முடிவடையாதிருந்தன.

(iii) நியாயசபையின் 2015 ஆம் ஆண்டிற்கான மீண்டுவருஞ் செலவினம் ரூபா 22,917,292 ஆகும். பரிசீலிக்கப்பட்டுப் பொருத்தமானவாறு முடிவெடுக்கப்பட்ட மேன்முறையீடுகளது எண்ணிக்கை 166 ஆகும். ஆகவே, ஒரு மேன்முறையீட்டை முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கம் செலவழித்த தொகை ரூபா 138,055 ஆகும்.

(iv) 2015 ஆம் ஆண்டின் செயல் முன்னேற்ற அறிக்கையின்படி முடிவெடுக்கப்பட்ட 166 மேன்முறையீடுகளில் 117 தள்ளுபடி செய்யப்பட்டு சலுகை வழங்கப்பட்ட மேன்முறையீடுகளது எண்ணிக்கை 35 ஆகும்.

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அரசாங்க மதிப்பீட்டின்படி மாதாந்த வாடகை ரூபா 350,000 ஆகவுள்ள கட்டிடம் ஒன்றிற்கு மாதாந்தம் ரூபா 600,000 வாடகை கொடுப்பனவு செய்யப்படும் அடிப்படையில் 2015 ஜுன் 01 முதல் 03 ஆண்டுகளுக்கு அதனைப் பெறுவதற்கான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது. இதற்கமைய, அரசாங்க மதிப்பீட்டிற்கு அதிகமாக மாதாந்த வாடகையாக ரூபா 1,750,000 உடன் ஆரம்பத் தொகையாக (Key Money) ரூபா 1,500,000 என மொத்தமாக ரூபா 3,250,000 மீளாய்வாண்டின்போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. வெளி நபர்களுக்கு முற்பணம் வழங்குவதற்கு நிதிப்பிரமாணங்களில் ஏற்பாடு இல்லாதபோதும், கட்டிடத்தை வாடகைக்குப் பெறுகையில் 6 மாத வாடகை (Key Money) ஆக ரூபா 3,600,000 முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. அதனை முற்பணம் எனக் கணக்கிலிடாது ஆண்டின் செலவினமாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

### 3.5 முகாமைத்துவ நலிவுகள்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சுத்திகரிப்புப் பணிகளுக்காக மீளாய்வாண்டின்போது ரூபா 511,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. சேவை வழங்குவதற்கு ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு முன்னர் சந்தைவிலை ஒப்பீட்டு முறைமையின் கீழ் 03 நிறுவனங்கள் கூறு விலைகளைச் சமர்ப்பித்திருந்த போதிலும், நேரடிப் பரிசோதனையின போது 02 நிறுவனங்கள் சுத்திரிப்புப் பணி வழங்காதனவாக இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

(ஆ) நியாய சபை பாதுகாப்புச் சேவைகளுக்காக உடன்படிக்கையில் ஈடுபட்டு அதற்கென 2015 ஆம் ஆண்டில் ரூபா 401,500 செலுத்தப்பட்டிருந்தது. அவ்வுடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் வருமாறு.

(i) சேவையில் ஈடுபடுத்தப்படும் உத்தியோகத்தர்களது பெயர், முகவரி, கையொப்பம் அடையாள அட்டை இலக்கம் என்பவற்றுடன் அவர்கள் வதியும் இடத்தின் கிராம உத்தியோகத்தரது சான்றிதழும் பெறப்பட வேண்டுமாயினும், அவ்வாறு செய்யப்படவில்லை.

(ii) கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்போது தலைமை எழுதுவினைஞரால் பாதுகாப்பு உத்தியோகத்தர்களது வருகை பரிசீலிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறு வருகைச் சான்றிதழ் பரிசீலிக்கப்படாது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளவாறான பதவியணியும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி | வெற்றிட எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 05 | - | 05 | - |
| (ii) | மூன்றாம் நிலை | - | - | - | - |
| (iii) | இரண்டாம் நிலை | 12 | 09 | 03 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 05 | 02 | 03 | - |
| (v) | (ஏனையவை/ ஒப்பந்த அடிப்படை) | - | 10 | - | 10 |
| | மொத்தம் | 22 | 21 | 11 | 10 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டு முடிவளவில் அங்கீகரித்த பதவியணியில் 11 வெற்றிடங்கள் நிலவின. அவ்வாறாக வெற்றிடமாகிய பதவிகளில் 04 சிரேஷ்ட நிலை, 03 இரண்டாந்தர நிலை, 03 ஆரம்ப நிலை என 10 பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடைபெற்றிருந்தது.